6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

53. சிறைத் துறையிலிருந்து மாதம் ஒன்றிற்கு 2,30,000 கட்டுகள் கொண்ட பட்டை வகை சானிடரி நாப்கின்களை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக நிருவாக இயக்குநருக்கு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)*-ன்கீழ், அனுமதி அளித்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 25-1-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 24-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

54. அரசுத் துறைகள், மாநிலத்தின் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் மாநில தன்னாட்சி அமைப்புகள் கைவினைப் பொருட்களை கொள்முதல் செய்வதற்காக “தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத்தை” விருப்புரிமை சார்ந்த கொள்முதல் முகவராக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் பிரிவு 16 (f)*-ன்கீழ், நியமனம் செய்தது குறித்து நிதித் (சம்பளங்கள்) துறையின் 26-5-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 150-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

55. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

135. மானியக் கோரிக்கை எண் 46-தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2016-2017. (தமிழ், ஆங்கிலம்)